(1889)

# இந்துசாதனம்.

| பத்திரக் கிரயம். | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு | ரு. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரு. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: | ,, | ரு. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரு. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரு. 5-00 |
| ,, | காற்கலம் | ரு. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ரு.சு. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஹூ புரட்டாதிமீ ௱எஉ; (1924 அக்டோபர் 2) வியழாக்கிழமை. { இலக்கம்—உசு.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கிவளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தந்திவிலாசம்:— தொண்டமானாறு.
ஙாபி. வல்லுவெட்டித்துறை. (H. 29.)


[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி கோத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்ருவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்யாத

உத்தி ...

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னேர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய தமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக் குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்சிலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷெயூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்ருவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனதியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்ருவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

என் மேல்விலாசம்:—


Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் மூஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்ஞற்காடு ஜில்லா.



பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

## அரைக்கீரை விரைத் தைலம்.




இதன் குணம்.

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காதுஇரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிருதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்ருய் வளரச்செய்யும். இந்த கோட்டிசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி அனுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாருது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேச் பிரத்தியேகம் வெளிநாடுகளுக்கு வீ. பீ. இல்லாததால் முற்பணம் அனுப்பவேண்டும்.

வி: எஸ். கோமளத்தம்மாள்,
மாணியுபாக்கரர்,
(Y 26) 8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.



4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
பதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது

அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினுல் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவாராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20 வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினுல் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினுல் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணுகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆருதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
**R. M. K.** வேலுசாமிபிள்ளை,
(Y. 31.) சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.



## பிரகடனம்.

ஸீனியர் வகுப்புக்குரியவை. 1924.

நிரைமீட்சிச்சருக்கம்: வில்லிபுத்தூரர் பாரதத்துள்ள இச்சருக்கம் பதவுரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு, நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் முதலியவற்றுடன் விலை சதம் 75. (அஞ 12.)

திருக்குறள் முதற்பத்ததிகாரம்: இப்பத்ததிகாரங்களும் தெளிபொருள்விளக்கப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கம் என்னுமிவற்றேடு விலை சதம் 50. (அஞ 8.)

பெண்கல்வி: மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய இந்த அரிய வியாசம் திருத்தியும் புதுக்கியும் அரும்பதவிளக்கத்தோடு சுத்தப்பதிப்பாக வெளிவந்துள்ளது. பெண்கள்படிக்கவேண்டியது விலை சதம் 85. (அஞ 14.)

ஜூனியர் வகுப்புக்குரியன. 1924.

நாலடியார் முதற் 15அதிகாரம்: இப்பதினைந்திகாரங்களும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு என்னுமிவைகளுடன் விலை சதம் 75.

சிசுபாலசரித்திரம்: விலை சதம் 50. (அஞ 8.)

மற்றும் நூல்கள்.

மயானகாண்டம்: ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துள்ள இக்காண்டம் பொழிப்புரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்புமுதலியவற்றுடன் 2ம்பதிப்பு. தமிழ் 7ம் 8ம் வகுப்புகளிற் கல்விபயிலும் மாணுக்கருக்குச் செய்யுட்பாடமாக உபயோகிக்கப்படுவது. விலை சதம்50.

கதிரையாத்திரைவிளக்கம்: கதிர்காமயாத்திரை அனுபவத்தையும் கதிர்காமவேலவர் திருவருட் பெருமையையும் கொண்டிச்சிந்து நடையிற் கூறுவது. ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்பாடிய கதிர்காமவேலவர்கீர்த்தனம், பரமானந்தப்புலவர் பாடிய நல்லைக் கந்தர் கீர்த்தனம், அகவல்என்னுமிவைகளுடன். விலைசதம்25.

சிவாரத்திரிவிரதமான்மியம்: சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அனுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் பிறவற்றையும் வசனநடையிற் கூறுவது. தோத்திரப்பாக்களுடன் விலை சதம் 10. (அஞ 2.)

அதிகமாக வாங்குவோருக்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். ஒரு ரூபாவிற்குக் குறைந்த புத்தகம் V. P. மூலமாக அனுப்பப்படமாட்டா.

Apply to
Pandit V. T. SAMBANDHAN,
Jaffna Hindu College,
(Q. 50.) Vannarponnai.

நமதுபத்திரிகை.

வருகிற திங்கட்கிழமை சரஸ்வதி பூசைத் தினமாதலால் இந்துசாதனம் அன்று வெளிவாராது புரட்டாசிமீ 23உ (9—10—24) வியாழக்கிழமை வெளிவருமென்பதைப் பத்திரிகாபிமானிகட்கு விநயத்தோடு தெரிவிக்கின்றோம்.


# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஞு புரட்டாசிமீ 17உ வியாழக்கிழமை


## இலங்கைச் சட்ட நிரூபண சபைச் சனப் பிரதிநிதிகள்.

இலங்கைப் புதிய சட்டநிரூபண சபைக்குச் சனப் பிரதிநிதிகளாக வருதற்குத் தனித் தனி முற்பட்டு நின்றவர்களின் பெயர் சம்மதங் கொடுத்தோர் தொகை ஜயமடைந்தவர்களென்னு மிவைகளை இற்றைப்பிரசரத்திற் பிரசரித்துள்ளோம்.

ஸ்ரீ அ. மகாதேவனவர்கள்

மேன்மாகாணத் தமிழ்ப்பிரதிநிதியாக ஸ்ரீ அ மகாதேவனவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஸ்ரீ மகாதேவனவர்கள், தமிழ்ச் சனத்தலைவர்களுளொருவராக விளங்கியவரும், இலங்கைப் புதிய அரசியற்றிருத்தத்தின் பொருட்டும், தமிழ்மக்களின் சுதந்திரத்தின் பொருட்டும் பெரிதும் உழைத்தவருமாகிய ஸேர். பொ. அருணாசலமவர்களின் புதல்வர் நிரம்பிய ஆங்கிலக் கல்வியறிவுடையவர். பரிஸ்ரர் எனப்படும் நியாயதுரந்தரர். யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரித் தலைமை ஆசிரியராகவிருந்து இக்காலத்து யாழ்ப்பாணத்துள்ள கொள்கைகளையும் உணர்ந்தவர் தமிழ்மக்கட்குரிய ஆசாரசீலங்களைக் கைக்கொள்ளுபவர் தமது தாதை முதாதையரைப் பின்பற்றித் தாமும் சட்ட நிரூபண சபையிற் பிரதிநிதியாகச் சென்று ஊரவர் பொருட்டுப் பெரிதும் உழைத்தல்வேண்டுமென்னும் வேணவாவுடையவர். ஸ்ரீமகாதேவனவர்கள் தமிழ்ப்பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பெற்றமையை யிட்டு எமக்குண்டான பெருமகிழ்ச்சியை அவருக்குத் தெரிவிக்கிறேம்.

மிஸ்ரர் E. R. தம்பிமுத்து அவர்கள்.

மட்டக்களப்புப் பகுதிக்கு மிஸ்ரர் E. R. தம்பிமுத்து அவர்களே கூடிய தொகையினரின் சம்மதம்பெற்றுச் சனப்பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டனர் மிஸ்ரர் தம்பிமுத்து அவர்களின் வாக்குவன்மையும் அரசியன்ஞானமும் உலகப் பிரசித்தமானவை மிஸ்ரர் தம்பிமுத்து அவர்கள் முந்தியமுறையிற் கீழ்மாகாணத்தாரின் நன்மையை வேண்டி நன்கு உழைத்தவர். இப்பொழுது நிகழ்ந்துள்ள தெரிதலில் இவருடைய எதிரியைக்காட்டிலும் ஆயிரக் கணக்கானோர் அதிகமாக இவருக்குச் சம்மதங்கொடுத்திருக்கின்றனர். மிஸ்ரர் தம்பிமுத்து அவர்கள் புத்தபிமானத்தோடும் ஊக்கத்தோடும் தம் நாட்டினரின் ஈடேற்றத்தின்பொருட்டுப் பெரிதும் உழைப்பரெனக் காத்திருக்கின்றேம்.

ஸ்ரீ M. M. சுப்பிரமணியமவர்கள்.

ஸ்ரீ M. M. சுப்பிரமணியமவர்களே திரிகோணமலைப்பகுதிக்குச் சனப்பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இவர் திரிகோணமலைப்பகுதியிற் பெருஞ் செல்வாக்குடையவர். திரிகோணமலைப்பகுதியில் நிகழும் பொதுக் கருமங்களெவற்றினும் இவர் ஈடுபட்டுள்ளவர். இவர் அங்கே முடிக்குரிய தரணியுமாவர். திரிகோணமலைத் துறைமுகம் விரைவிற் பழைய விசேஷநிலையடையவிருப்பதால் ஸ்ரீ சுப்பிரமணியமவர்கள்போன்ற தக்காருடைய பிரதிநிதித்துவம் அப்பகுதிக்கு ஆவசியகம் வேண்டியதேயாம்.

புதிய சட்டநிரூபண சபையில் வடமாகாணப் பிரதிநிதிகள் ஐவர் கீழ்மாகாணப் பிரதிநிதிகள் இருவர் மேல்மாகாணப் பிரதிநிதியொருவராக எண்மர் தமிழ்ப்பிரதிநிதிகளிருக்கின்றனர். இவர்களில் கௌரவ ஸ்ரீ. இராமநாதனவர்கள், கௌரவ ஸ்ரீபாலசிங்கமவர்கள், கௌரவ ஸ்ரீ துரைசுவாமியவர்கள் என்னும் மூவரும் எதிரிகளின்றிச் சர்வசன சம்மதமாகத் தெரிவுசெய்யப்பெற்றுள்ளனர். ஏனைய ஐவரும் எதிரிகளுடையராய் கூடிய தொகை வாக்காளர் சம்மதம்பெற்றுத் தெரிவுசெய்யப்பெற்றுள்ளவர்களாவர். மேலே சொல்லப்பட்ட மூவரும் கௌரவ மிஸ்டர் தம்பிமுத்து அவர்களும் முன்னருஞ் சட்டநிரூபணசபை சனமுறையுடையராவர். கௌரவ ஸ்ரீ கனகரத்தினம், கௌரவ ஸ்ரீ இராசரத்தினம் கௌரவ ஸ்ரீ மகாதேவன் கௌரவ ஸ்ரீ சுப்பிரமணியமென்னும் இந்த நால்வரும் சட்டநிரூபணசபைக்குப் புதியவராயினும் தேசசேவை அரசியன்ஞானமென்னு மிவற்றை யுடையவர்களாவர். இவர்கள் நால்வரும் முந்திய நால்வரோடுங் கலந்து யோசித்துத் தமிழகத்தார்க்குச் சிறப்பாகவும் இலங்கை வாசிகட்குப் பொதுவாகவும் உழைப்பரெனக் காத்திருக்கின்றேம்.

இனி, சட்டநிரூபண சபைப் பிரதிநிதிகளாக வருதற்கு முற்பட்டு நின்று அனுகூலமுறாத அபிமானிகளைப்பற்றி யாம் குறைவாக நினைக்கவொண்ணாது. அனுகூலமுற்றவருக்கும் உறாதவருக்குமிடையே சிற்சிலர்விஷயங்களில் இருபத்தைந்து பதினேழு முதலிய அற்ப தொகையே பேதமாகக் காணப்படுகின்றன. இத்தொகைகளே இவர்கள் தகைமையை இனிது காட்டும். மேலும் அனுகூலமுறுதலும் உறாமையும் தகைமையில்மாத்திரம் முற்றுகத் தங்கியிருக்கின்றதென எண்ணிக்கொள்ளவொண்ணாது. ஒருவர் அனுகூலம் அவர்மாட்டுள்ள இடம் பொருளேவல் செல்வாக்கு என்னுமிவற்றிலும் பெரிதும் தங்கியிருக்கின்றது. ஆதலால் அனுகூலமுற்றோர்மாத்திரந் தக்கவரென்றும் அனுகூலமுறாதார் தகாதவரென்றும் விபரீதமாக விளங்கி அங்ஙனம் அனுகூலமுறாதாரைக் குறை கூறுவது புத்தியின்பாற்படாத செயலாகும். அனுகூலமடையாதவர்கள் தைரியமிழந்துகொண்டு தேசசேவை செய்யும் விஷயத்திற் பின்னிற்பதும் உசிதமன்று. முயற்சி திருவினையாக்குமென்றபடி அவர்கள் மேலும் மேலும் தேசசேவைசெய்து சனங்களின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெறுதல்வேண்டும். அதுவுமன்றித் தேச சேவை செய்தற்குச் சட்டநிரூபண சபைக்குத்தான் போகவேண்டுமென்று ஒரு நியதியில்லை. அதனை அங்குஞ் செய்யலாம் இங்குஞ் செய்யலாம். சட்டநிரூபண சபைக்குச் சென்றும் தேசசேவை செய்யாதாரையும் அங்குச் செல்லாது நின்று தேசசேவை செய்தவரையும் அனுபவத்தில் இடையிடையே கண்டுள்ளோம். ஆதலால் இவைகளில் யாதுமில்லை. பரோபகாரசிந்தையே தேச சேவைக்குக் காரணமாயுள்ளது. தேச சேவை பிரதிபலன் கருதிச் செய்யப்படுவதுமன்று. இவற்றையெல்லாம் சனப்பிரதிநிதிகளாக வந்தவர்களும் வர முயன்றவர்களுஞ் சிந்திப்பார்களாக.

## நடராஜ தத்துவம்.

சாக்ஷாத் பரம்பொருளாகிய குஞ்சித பாத நடராசப்பெருமான் "சீராரும் சதுர்மறையும், தில்லைவாழ் அந்தணரும், பாராரும் புலிமுனியும், பதஞ்சலியும் தொழுதேத்த, வாராரும் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற, ஏராருமணிமன்றில்" அனவரத தாண்டவம் செய்தருளுவர். நாம் என்றும் அழியாப் பேரின்பப் பேற்றை அடைவதற்குச் சிதம்பரசபாநாதருடைய குஞ்சிதபாதசேவையே வாய்ந்ததாகும். திருவேட்டீச்சரம் (திரு-முத்தித் திரு; வேட்ட-ஐக்கியப்பட்ட; ஈச்சரம்-ஈசனுக்குறைவிடம், அதாவது தஹராகாசம் அல்லது சிதாகாசம்) ஆகிய சிதம்பரத்திலுள்ள கனகசபையிலே கண்ணுதற்பெருமான் நடராசமூர்த்தியாக எழுந்தருளிப்பஞ்சகிருத்திய திருநிருத்தம்செய்தல் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றபடி அப்பெருமான் அசைத்தாலன்றி அணுவும் அசையாது; அப்பெருமான் அசையச் சரம் அசரமாகிய பொருள்களெல்லாம் அசையும் என்பதை விளக்குவதாம். சிதம்பரம் ஆகாயலிங்கஸ்தலமாக இருத்தலால், அங்குள்ள கனகசபையில் ஆனந்தத்தாண்டவ நடராசப்பெருமானுடைய திருக்கரத்தின்குறிப்பானது 'என்னை யார் அடைகின்றார்களோ அவர்களை யான் எனதென்னும் இருவகைப்பற்றினின்றும் நீக்கிப் பரமானந்தமாய் விளங்கும்படி செய்கின்றேன்" என்பதை உணர்த்துகின்றது. இதுபற்றியே திருநாவுக்கரசுநாயனாரும் "கைந்நின்ற ஆடல் கண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே" எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

நடராசப்பெருமான், சிதம்பரத்திலுள்ள கனகசபையிலும், திருவாலங்காட்டிலுள்ள இரத்தினசபையிலும், மதுரையிலுள்ள வெள்ளியம்பலத்திலும், திருநெல்வேலியிலுள்ள தாமிரசபையிலும், திருக்குற்றாலத்திலுள்ள சித்திர சபையிலும் திருநிருத்தஞ் செய்தருளுவர் சந்திர சடாதரராகிய சிவபெருமான், சூக்கும பஞ்சாக்ஷரமென்றும் ஒருதலைமாணிக்கமென்றும சொல்லப்படும் "சிவாயநம" என்னும் திருவைந்தெழுத்தின் திருவுருக்கொண்டு ஆன்மகூட்டத்திற்கு சேர்ந்த பிறவிப் பிணியை நீக்கும்பொருட்டு ஆனந்தநிருத்தம் செய்தலை அறிந்தவர்கள் பிறப்பு இளமை மூப்பு பிணி சாக்காடு என்பனவற்றினீருந்து நீங்குவர். திரிகரணமும் மாறுபாடின்றி ஒருமித்த இடத்தே சிவாநந்தநிலை உண்டாதலினால் அதற்குரிய சாதனம் மேற்கூறியவாறு பஞ்சாக்ஷர வடிவமாய்த் திருநிருத்தம் செய்தருளும் நடராசவடிவமேயாம். வாக்கினாற் பஞ்சாக்ஷரசெபமும் மனத்தினாற் பஞ்சாக்ஷரதியானமும் செய்யுமிடத்துக் கண்ணினாற் றரிசிக்கும் பஞ்சாக்ஷரம் நடராஜமூர்த்தியாதலின் அம்மூர்த்தியைத் தரிசித்தல் அத்தியாவசியகமாகும். அத்திருநடனத்தைச் சற்குரு மூலமாகச் சந்தேகவிபரீதமற அறிந்தவர்களுக்கே இனிப் பிறவாநிலை உண்டாகும்.

திருநடனமாவது பூதாகாய நடனம், மனாகாய நடனம், சிதாகாய நடனம் என மூன்றிறப்படும். பூதாகாய நடன சேவையாவது:-குறிக்கப்பட்ட தினங்களிற் சிவஸ்தலங்கடோறும் சென்று ஆகம விதிப்படி நடராஜப்பெருமானுடைய திருநிருத்தத்தைத் தரிசித்தலாகும். மனாகாயநடன சேவையாவது:- பஞ்சாக்ஷர வடிவமாக விளங்கும் நடராசமூர்த்தியை மனத்தால் ஒன்று தியானித்தலேயாம். சிதாகாய நடன சேவையாவது:-"பஞ்சாக்ஷரத்தின் மெய்ப்பொருளாகிய சிவமே நான்" என்று சோஹம்பாவனை செய்தலாம். இது "சிவயோகம்" எனப்பெறும். பூதாகாய நடன தரிசனத்தினால் இம்மைப்பயனும், மனாகாய நடன சேவையால் மறுமைப்பயனும், சிதாகாயநடன சேவையால் மோக்ஷமுஞ் சித்திக்கும். நடராசப்பெருமான், முயலகன்மேல் நின்றருளிய திருப்பாதமும், தூக்கியருளிய சிவந்த திருவடியும், பாதங்களிற் சேர்ந்திய திருச்சிலம்பும், புலித்தோலாடையும், திருவரையிலே பொருந்திய கெறிப்பும், கச்சின் அழகும், திருவுந்தியிலே பொருந்திய உதரபந்தனச் சேர்வையும், உபவீதம் பொருந்திய திருமார்பும், வீசியருளிய சிவந்ததிருக்கரமும், திருமுறுவலும் திருமுகமலர்ச்சியும், பின்னே தாழ்ந்த விரிந்த சடைக்கற்றையும், சர்ப்பாபரணமும் பிறவும் உடையராய்ச் சிவகாமியம்மையார் அதிசயித்துத் தரிசிக்கும்படி திருநிருத்தஞ் செய்தருளுவர்.

சிவபிரான் முன்னொருகாலத்தில் தேவதாருவனத்திலே, சடமாகிய கர்மமே பலன்தருகிறதென மயங்கி ஈசனை மறந்து [illegible] அவமே புரிந்துநின்ற முனிவர்களின் [illegible]த்து அனுக்கிரகம் செய்யும் பொருட்டு ஒரு திருப்பாதத்தைத் தூக்கி ஆனந்த தாண்டவஞ் செய்தருளினர். அப்பொழுது தாருகாவன ரிஷிகளால் வேங்கை, சர்ப்பம், முயலகன், நெருப்பு, மகாமந்திரங்கள் என்னும் இவ்வைந்தும் விடுக்கப்பட்டன. (1) வேங்கை என்பது அஞ்ஞானத்தினுல் உண்டான குரோதம். (2) சர்ப்பம் என்பது மாற்சரியமாகும். (3) முயலகன் என்பது அஞ்ஞானமாகும். (4) அக்கினி என்பது கோபமாகும். (5) மகா மந்திரங்களாவன சங்கற்பங்களாம். இவை தாருகாவன ரிஷிகளிடமிருந்து அவர்களுடைய சொரூபத்தைமறைத்துநின்றன. சிவபிரான் அவற்றைப் போக்கி அவர்களுக்கு அருள் புரிந்தனர். இதுவே ஆனந்த தாண்டவமென்று சொல்லப்படும். மாயாமலத்தினுல் உண்டான பாசத்தாற் கட்டுண்டு நல்வினை தீவினைகளினுல் மோதுண்டு உழலும் ஆன்ம கூட்டங்கள் சச்சிதானந்த நிலையை அடைவதற்கு இவ்வாவரத தாண்டவதரிசனமே சிறந்தசாதனமாகும். சிருஷ்டி, திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம் ஆகிய இவ்வைந்து தொழில்களும் அவாது நடனமேயாம். பஞ்சகிருத்தியங்களைச் செவ்வனே உணர்ந்தவர்களுக்கே "என்செயலாவ தியாதொன்று மில்லை இனித் தெய்வமே, உன்செயல்" என்னும் திடசித்த முண்டாகும். இதனால்நன்மை தீமை சுகம் துக்கம் முதலானவற்றிற் சிக்கிச் சுழன்றுகொண்டிருக்கும் மனமானது பதைப்பற்று உபசாந்த நிலையை அடையும்.

அவதானிக்கவேண்டியது

சட்டநிரூபண சபைச் சனப் பிரதிநிதித் தெரிவில் எதிரிகளின்றித் தெரிவு செய்யப்பட்டோரொழிய ஏனையோர் இருவர் மூவர் தனித்தனி முற்பட்டுநின்று கட்சிகட்டி முயற்சிசெய்தனர். வாக்காளரும் ஒவ்வொரு பக்கத்தாரைச் சார்ந்து நின்று மற்றப்பக்கத்தாரோடு மாறுபட்டு உழைத்தனர். இவை காரணமாக முற்பட்டு நின்றோருக்கிடையும் அங்ஙனம் முற்பட்டுநின்றோரைச் சார்ந்துநின்றோருக்கிடையும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருத்தல் கூடும். அவ்வாறான மனஸ்தாபங்கள் ஏதும் ஏற்பட்டிருக்குமேல், பிரதிநிதிகளைத் தெரிவு செய்து முடிந்த அந்த நிமிஷமே அந்த மனஸ்தாபமும் நீர்கிழிய எய்த வடுப்போல ஒழிந்துபோதல்வேண்டும். விளையாடும்போது பிள்ளைகள் இருகட்சி பிரிந்து விளையாடுவது போலவும், நாடகம் ஆடுவோர் இராமராகவும் இராவணனாகவும், கம்ஸனாகவும் கண்ணனாகவும், கௌரவராகவும் பாண்டவராகவும் வேஷந்தரித்து மாறுபட்டு நடித்தல்போலவும், பிள்ளைகள் விளையாட்டு முடிந்தபின்னும், நாடககாரர் நாடகம் முடிந்தபின்னும ஐக்கியப்பட்டு ஒருங்கு செல்வதுபோலவும் சனப்பிரதிநிதிகளாகவருதற்கு முற்பட்டுநின்றவர்களும் அவர்களைச்சார்ந்தவர்களும் எல்லாவற்றையும் மறந்து ஐக்கியப்பட்டுத் தேசம் சாதி என்னும் இவற்றின் ஈடேற்றத்தின் பொருட்டு உழைத்தல்வேண்டும். ஏனென்றால் இக்கட்சியார் கொண்ட நோக்கம் தேசசேவை செய்ய வேண்டுமென்னும் நன்னோக்கமாம். வாக்காளரிடத்தில் அச்சமையத்திற் காணப்பட்டது பெரும்பான்மையும் அபிப்பிராய பேதமாம், உறவுமுறையும் நட்பும் இன்னபிறவும் சிற்சிலவாக்காளரிடத்துக் காணப்படுதல் சகசமே.

## உலகம் பலவிதம்.

உலகத்திலே அறிவுடையாரென இருப்பவரிடத்தும் சில குற்றமான செயல்கள், இன்றேற் குற்றம்போற் பிறருக்குத் தோற்றுஞ் செயல்கள் காணப்படுகின்றன. இச்செயல்கள் குற்றமானவை யென்பதையும குற்றமாகப் பிறர்க்குத் தோற்றுவனவென்பதையும் அந்த அறிவுடையார் அறிந்திருந்தும் அவற்றோடு தொடர்புபட்டிருக்கின்றார்கள். எல்லாமறிந்த இவ்வறிவுடையார் தாம் அறிந்தும் இயைபில்லாதவற்றைச் செய்தற்கு அந்தரங்க காரணமிருத்தல்வேண்டுமென்பதனை யுணர்ந்து அவற்றைக் குறித்து யாதும் பேசாது அவர்மாட்டுள்ள குணங்களையே பெரியோர் எடுத்துப்பேசுவர். அக்குற்றத்தோடு தொடர்புள்ள அறிவுடையோரும் இதுவினைப் பயனுகுமென் றெண்ணி கெட்டுயிர்த்து விதியைநொந்துகொண்டு பிறர்க்கு யாதும் பேசாது வாளாவிருப்பர். இதுபற்றியே,

"அறியாருமல்லர் அறிவதறிந்தும்
பழியோபெட்டவைசெய்தல்—வளியோடி
நெய்தல்நறவுயிர்க்கும் நீள்கடற்றண்சேர்ப்ப
செய்தவினையான்வரும்". [ப

என்று ஆன்றோர் கூறியுள்ளார். இவ்விஷயத்திற் பெரியோரைச் சுளகுக்கு ஒப்பிட [illegible] நெல்லைவிட்டுக் கொளிக்கும்போது அது அங்கெல்லோடுகலந்துள்ள பதர் முதலிய பயனற்ற பொருள்களை அகற்றிவிட்டு நெல்லைமாத்திரம் தன்னகத்தே வைத்துக்கொள்ளும். கீழ்மக்களெனிலோ, "உண்டுகுணமிங் கொருவர்க்கெனினுங்கீழ், கொண்டு புகல்வதவர்குற்றமே" யென்றபடி அவ்வறிவுடையோரிடத்திற் குறைகாணப்படுதற்கான அந்தரங்க காரணத்தை அறிய முயலாதவராயும், அதுபூர்வவினைப் பயனென்பதைச் சிந்தியாதவராயும், அவ்வறிவுடையார் மாட்டு விளங்குஞ் சுகுணங்கள் இவர்களிடத்துப் பொருந்திய அழுக்காற்றினுல் மறைக்கப்பட அவற்றை உணராமலும், ஓரிடத்திலுள்ள அழுக்கைமாத்திரம் கூட்டிக்குவித்து வைக்கும் விளக்குமாறுபோல அவ்வறிவுடையார்மாட்டுள்ள குறைகளைமாத்திரம் எடுத்துத் தூற்றுவர். இவ்விளக்குமாறுபோல்வார் பெரியோரால் எக்காலும் வெறுக்கப்படுவர்.

* * *

தமக்கு அடங்கி யொழுகவேண்டியவர் அங்ஙனம் அடங்கி யொழுகாமையைக் கண்டு அவர் தொடர்பைவிட்டு அகல்வார் விவேகிகள். தமக்கு அடங்கி யொழுக வேண்டியவர் அங்ஙனம் அடங்காமையைக்கண்டு அவருடன் மாறுபட மனமொராய்த் தாமே அவர்க்கு அடங்கி நடப்பார் பேடிகள். தமக்கு அடங்கி யொழுக வேண்டியவர் அங்ஙனமின்றி யொழுகுதலைக்கண்டுங் காணார்போலிருப்பர் மானமற்றார். அஞ்சுமாபாதகங்களையும் அஞ்சாது அந்தரங்கத்திற் செய்துகொண்டு, அரிதட்டு ஊசியைநோக்கி உன்னிடத்திலே ஒரு துவாரங் காணப்படுகின்றதென்று சொன்னவாறு, அறிவுடையார் மீது ஒருதோஷங்கற்பிப்பார் உலுத்தர்கள். அந்தரங்கத்திலே தாஞ்செய்யும் தீச்செயல்களைப் பிறர் அறியாரென்று எண்ணியொழுகுதல் இற்புலி தன்கண்களை மூடிக்கொண்டு பால் அருந்துவது போலாம். "பிறன்பழி கூறுவான் தன்பழியுள்ளுந் திறந்தெரிந்து கூறப்படும்" என்னும ஆப்தவாக்கியத்தைச் சற்றுமெண்ணாது சிறியார் பெரியாரைத் தூற்றவும் அப்பெரியார் வாளாவிருத்தல் சிறியார்மாட்டுப் பழியின்மைபற்றியன்று. பிறன்பழிகூறல் பெரியா ரியல்பன்றென்பதுபற்றியேயாம். தேன்வண்டு மலரிற் படியுமன்றி மலத்திற் படிவதில்லை. பெரியார்தம்மை யிகழ்பவரைத் தாம் இகழாதொழிதலோடு நில்லாது, தம்மையிகழ்ந்தமையினுலே அங்ஙனம் இகழ்ந்தவர் நரகிற்காளாவரே யென்றும் வருந்துவர்.

"தம்மையிகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றி மற்(று), எம்மையிகழ்ந்த வினைப்ப யத்தால்—உம்மை, எரிவாய் நிரயத்து வீழ்வர்கொலென்(று), பரிவதூஉஞ் சான்றோர்கடன்".

* * *

பிறண்டித்துறை, உவிஸ்க்கிமுத்து, உவயின்பிள்ளை, பீர்சிங்கம், வூரப்பேன் ரத்தினம், ஜின்தம்பி, என்னுமிவர்கள் தங்கள் உத்தியோகங்களிலிருந்து இளைப்பாறிச் சுயதேசத்திற்கு மீண்ட தினமாகிய சென்ற செவ்வாய்க்கிழமை (30-9-24) மாலை ஆறுமணிவரையில் யாழ்ப்பாணப் பட்டினப் பெருக்கெரு வோரத்திலுள்ள சாய்ப்பு விருந்தை யொன்றில், இவர்களுடைய நண்பர்களாகிய பஞ்சமாபாதக சபையாரின் முயற்சியால் ஒரு பெரும பிரியாவிடைக் கூட்டம் நடைபெற்றது. அத்தருணத்தில் திருவாளர் கொலைநாயகம்பிள்ளையவர்களே சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுக் கூட்டத்தை நடத்தினர். சோரப்பமுதலியார் சபைக் காரியதரிசியாக அந்தச்சபையத்திற்கு நியமிக்கப்பட்டார். பொய்யப்பச்செட்டியார் சபாநாயகருக்கும் மற்றை அறுவருக்கும் மாலையிட்டனர். திருவாளர்கள் துராகிர்த மூர்த்தி, பொய்வியாச்சியாசா, அடிபிடியம்பலம் முதலிய பலர் ஆங்குவந்து குழுமினர். பெண்களின் பிரதிநிதியாக மாது ஸ்ரீ வியபிசாரத்தம்மாளும் மாதஸ்ரீ முகடியம்மாளும் ஆங்குச் சமுகமாயிருந்தனர். சபைத் தலைவர் அச்சமையத்திற் சபை கூட்டப்பட்டநோக்கத்தைச்சபையாருக்கு எடுத்து விளக்கினர். அதன்பின் தூர்த்தலிங்கம்பிள்ளை பின்வருமாறு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தார்.

அநுமைவாய்ந்த ஐயன்மீர்,

நூற்றுக்கு மேற்பட்ட வருடகாலமாக, இந்த யாழ்ப்பாணத்திலே தோன்றி, பஞ்சமாபாதக சபையாராகிய எங்களுடன் நண்பு பூண்டு உழைத்து எங்கள் செயல்கட்கெல்லாம் பெரிதும அநுகூலமாகவிருந்த நீங்கள், எங்களை விட்டுப் பிரிந்து செல்ல நேர்ந்ததேயென்பதை யெண்ணியெண்ணி மனம்புண்ணுனேம். இந்தச் சமையத்தில் நீங்கள் இச் சபையாராகிய எங்களுக்குச் செய்துவந்த உதவிகளை இங்கே எடுத்துச் சொல்லி நன்றி பாராட்டுதல் அவசியமாகும். நீங்கள் இவ்வியாழ்ப்பாணத்திற் புகுந்து இங்கிருந்த புராதன சீர்திருத்தத்தைமாற்றி நவீனநாகரிகத்தை அநுசரிக்கச் செய்தீர்கள். நீங்கள் கொலைநாயகம் பிள்ளையுடன் சேர்ந்து கொலையையும் சோரப்ப முதலியாருடன் சேர்ந்து களவையும் பொய்யப்பசெட்டியாருடன்கூடிப் பொய்யையும் துராகிருதமூர்த்திக்குத் துணையாகநின்று சகல தீச்செயல்களையும், வியபிசாரத்தம்மாள் முகடியம்மாள் முதலியோருடன் ஐக்கியப்பட்டு வியபிசாரம் தரித்திரம் என்னுமிவைகளையும் முறையே விருத்திசெய்துவந்தீர்கள். நீங்கள் இங்கே வந்து செய்த கருமங்கள் இன்னும் பலவுள. தனவந்தர்களை ஒட்டாண்டிகளாக்கித் தெருவழியே அலைந்துதிரியச் செய்தீர்கள்; சுப்பிறீங் கோட்டிற் கொலை வியாச்சியத்தை அதிகரிக்கச் செய்து நியாயவாதிகளுக்கு வருவாய்காட்டினீர்கள்; தாய் பிள்ளையை வெறுக்கவும், தந்தையை மைந்தன் அலட்டியஞ்செய்யவும், கற்புநெறியையுடைய மாதர் தம்மொழுக்கந் திறம்பிக் குடித்தனங்குலைந்து தீராவசைக்கு ஆளாகவும், உத்தியோகத்தர் தம் உத்தியோகத்தை விடுத்துத் திருடராகிக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைச்சாலைக்குப் போகவுஞ் செய்தீர்கள்; நீங்கள் சிறியோர் வாயிற் புகுந்து அச்சிறியோர் மயங்கிப் பெரியோரை நிந்திக்கச் செய்தீர்கள்; ஞுதக்குத தூதாயிருந்தீர்கள்; அறத்தைக் கெடுத்து மறத்தை விருத்தி செய்தீர்கள். நீங்கள் செய்துவந்த செயற்கருஞ் செயல்களோ இன்னும் பல. அவற்றையெல்லாம் இங்கே விரித்துக் கூறுதல் முடியாதாகும். இவ்வாறு இப் பஞ்சமாபாதக சபையாருக்குப் பெருஞ் சகாயமாகவிருந்த நீங்கள் காலவித்தியாசத்தினால் எங்களைக் கலக்கவைத்துப் பிரிந்துசெல்வதை யிட்டுப் பெரிதும் வருந்துகின்றேம். எங்களைப் பிரிந்து நீங்கள் சென்றாலும் எங்களை மறந்துவிடமாட்டீர்களென என்னுகின்றேம். நீங்கள் எங்களுக்குச்செய்தநன்றியையும் நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். நீங்கள் எங்கிருந்தாலும் கடிதவாயிலாக உங்கள் க்ஷேமத்தை இடையிடையே எங்களுக்குத் தெரிவிப்பீர்களெனக் கருதியிருக்கின்றேம். நீங்கள் சிரதாயாத்திரையாகச் சென்று சுகமே வாழும்வண்ணம் முனியப்பர் திருவருள் முன்னிற்பதாக.

இங்ஙனம்,

தங்களை என்றும் மறவாத

பஞ்சமாபாதக சபையார்.

யாழ்ப்பாணம்

1924ஆ செப்டெம்பர் 30உ.

சபையிலிருந்தோரெல்லாரும் சுருட்டு சிகறெற் முதலியன கொடுத்து உபசரிக்கப்பட்டார்கள். கூட்டம் முடிந்தபின் பிறண்டித்துறை முதலியோர் பஸ் மார்க்கமாகப் பருத்தித்துறைக்குப் புறப்பட்டனர். அங்குச் சிலகாலந் தங்கி அதன்பின் தங்கள் தங்களூருக்குச் செல்வார்களென அறியலானேம்.

## இலங்கைப் புதிய சட்ட நிருபண சபைச் சனப் பிரதிநிதிகள் தெரிவு.

எதிரிகளாக முற்பட்டு நின்ற பிரதிநிதிகளின் பெயரும் சம்மதஞ்சொன்னோர் தொகையும் ஸ்தானங்களும்.

(அநுகூலமடைந்தவர் நாமங்கள் தடித்த எழுத்திலுள்ளன.)

* இந்தக் குறியிடப்பட்டவர்களின் பிணைப் பணம் இல்லை.

வடமாகாணம் தென்பிரிவு

| | |
|---|---|
| ஸ்ரீ ஆ. கனகரத்தினம் | 1627 |
| வேர் அ. கனகசபை | 1482 |
| மிஸ்ரர் J. K. சண்முகம் | 891 |
| ஜெயமடைந்த தொகை | 145 |

மேற்படி மாகாண மத்தியபிரிவு.

| | |
|---|---|
| ஸ்ரீ சு. இராசரத்தினம் | 2116 |
| ஸ்ரீ த. இராமநாதன் | 1386 |
| | 730 |

மேல்மாகாணத் தமிழர் ஸ்தானம்.

| | |
|---|---|
| ஸ்ரீ அ. மகாதேவன் | 928 |
| டக்ரர் மு. மு. குமாரசுவாமி | 760 |
| ஸ்ரீ இ. பத்மநாதன் | 569 |
| | 168 |

மட்டக்களப்புப் பிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் E. R. தம்பிமுத்து | 1165 |
| டக்ரர் A இராசசிங்கம் | 299 |
| | 866 |

தென்மாகாண மேற்குப்பிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் C. W. W. கன்னங்கரா | 4177 |
| மிஸ்ரர் விறுன்சிஸ்-டீ. சொய்சா | 2310 |
| | 1867 |

தென்மாகாணம் கீழ்ப்பிரிவு

| | |
|---|---|
| மிஸ்ரர் V. S. விக்கிரமநாயக | 974 |
| மிஸ்ரர் G. K. W. பெதிரு | 957 |
| | 17 |

மேற்படி மாகாண மத்தியபிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் F. உபயசேகர | 3569 |
| மிஸ்ரர் லயனல்-டீ-வொன்சேய்க்க | 1654 |
| | 1915 |

இரத்தினபுரிப்பிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் A. H. E. மொலமூர் | 3166 |
| ளனம் W. E. பொதரஜு | *676 |
| | 2490 |

வடமேல்மாகாணம் மேற்குப்பிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் C. H. Z. பர்நாந்து | 3120 |
| மிஸ்ரர் C. E. கொறியா | 2717 |
| | 403 |

மேற்படி மாகாணக் கீழ்ப்பிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் G. E. மடவேலா | 3460 |
| மிஸ்ரர் T. B. L. மொனாமெல | 1344 |
| | 2116 |

கேகாலைப்பிரிவு

| | |
|---|---|
| மிஸ்ரர் A. F. மொலாமூர் தொகை தெரியாது. | |
| மிஸ்ரர் A. A. விக்கிரமசிங்கி வித்தியாசம் | 1645 |

கொழும்பு வடபிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் C. E. விக்ரர்கோறியா | 4166 |
| மிஸ்ரர் E. W. ஜயவாதன | 2560 |
| | 1606 |

திரிகோணமலைப்பிரிவு.

| | |
|---|---|
| ஸ்ரீ M. M. சுப்பிரமணியம் | 225 |
| ஸ்ரீ S. தியாகராசா | 98 |
| | 127 |

களுத்துறைப்பிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் E. W. பெறிற | 4651 |
| மிஸ்ரர் S. R விஜயமானி | 2536 |
| | 2115 |

மத்தியமாகாண நாட்டுப்பிரிவு.

| | |
|---|---|
| மிஸ்ரர் ஜோர்ஜ் E. De. சில்வா | 3615 |
| மிஸ்ரர் P. B. நம்புக்வெலா | 3590 |
| மிஸ்ரர் D. E. வீரசூரிய | *786 |
| | 25 |

மேற்படி மாகாண நகர்ப்பிரிவு

| | |
|---|---|
| மிஸ்ரர் A. C. G. விஜயக்கோன் | 2366 |
| டக்ரர் T. B. கொபெக்கடுவா | 1134 |
| மிஸ்டர் A. A. பெமரு | 647 |
| | 1232 |

மகமதிய பிரதிநிதிகள் மூவர்.

| | |
|---|---|
| மிஸ்ரர் H. M. மைக்கன் மரக்காயர் | 10311 |
| ,, N. H. M. அப்துல்காதர் | 6705 |
| ,, T. B. ஜாயா | 5221 |
| ,, மொகமெட் ருயல் | 3629 |
| | 3606 |

இந்திய பிரதிநிதிகள் இருவர்.

| | |
|---|---|
| மிஸ்ரர் I. X. பெறியிற | 5141 |
| ,, மொகமெட் சுலுத்தான் | 3511 |
| ஸ்ரீ. கோ. நடேசய்யர் | 2948 |
| மிஸ்ரர் S. P. சார்ல்ஸ் | 1877 |
| டக்ரர் I. டேவிட் | *543 |
| மிஸ்ரர் R. தன்றம்ஜீ | *266 |
| | 1630 |

பறங்கியர் பிரதிநிதி இருவர்.

| | |
|---|---|
| மிஸ்ரர் G. A. உவில்லி | 1173 |
| ,, N. J. மாட்டின் | 1155 |
| ,, O. J. C. பீவின் | 844 |
| | 18 |

## சமாசாரம்.

வண்-வேங்கடேசப் பெருமாள்கோவில் உற்சவம்—சென்ற திங்கட்கிழமை வண்-வேங்கடேசப் பெருமாள்கோவிலில் உற்சவம் ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

புதிய சட்டநிருபணசபை.—புதிய சட்டநிருபணசபைக்கூட்டம் இந்த அக்டோபர்மீ 15ம்உ புதன்கிழமை நடைபெறுமென அறியலானேம்.

குடியினால்மாண்டான்.—நவாலியிலுள்ள ஒருவன தனதுசிநேகிதருடன் கீரிமலைக்குச்சென்று அளவுக்குமிஞ்சிச் சாராயத்தைக் குடித்தமையினால் மாண்டுபோனான்.

கடையிற்சுவாமி குருபூசை —நிகழும் இரக்தாட்சி வருஷம் புரட்டாதிமீ 25ம் உ (10-10-24) வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்றுநாள் வரைக்கும் மேற்படி கடையிற்சுவாமி கோவிலில் நடைபெறும்.

சச்சிதாநந்தராஜயோகிகளின்சம்பிரசங்கம்:- யோகிகள் இந்தப் புரட்டாதிமீ 8உ (23-9-24) செவ்வாய்க்கிழமை இராமநாதன் கல்லூரியிலும், சென்ற இரவு செல்லிபடி தாசினாபாடசாலையிலும் தலைமாக்கடந்த வடசயிலைசென்ற புனிதவதியார் என்னும் காரைக்காலம்மையாருடைய திவ்விய சரித்திரத்தைப் பக்கவாத்திய சகிதமாகப் பிரசங்கஞ் செய்தார்கள்

மகாத்மாகாந்தியின் ஜெநநதினக்கொண்டாட்டம்.—இன்று காந்தியடிகளின் ஜெநநதினக் கொண்டாட்டம் இங்கு வழக்கம்போல் நடைபெறும். இன்று மாலை ஐந்துமணியளவில் மகாத்மாகாந்தியடிகளின் திருவுருவப் படம் அலங்காரவைபவத்துடன் எழுந்தருளப்பெற்று வண்ணை-வைத்தீஸ்வரன்கோயிலை வலம் வந்து அவ்வூர்வேங்கடேசப்பெருமாள்கோயிலை அடையும். அங்குச் சிறந்த உபந்நியாசங்கள் செய்யப்படும்.

ஒரு மோட்டர் சாரதி கொல்லப்பட்டான்:—சென்றசெவ்வாய்க்கிழமை இரத்தினபுரியிலே வியானேறிஸ் என்னும்ஒருவன் ஒரு பஸ் சாரதியை ஒரு கத்தியினாற் குற்றிக்கொன்றான். குற்றியவன் ஓடி மறைந்துவிட்டான்.

ஒரு பெண்ணின் தீரச் செயல்—கொழும்பு நகரசங்கக் கோட்டிலே பொலிஸ்காரன் ஒருவன் சாட்சி கூறுஞ் சமையத்தில் அலிஸ் என்னும் ஒரு பெண் மேற்படி பொலிஸ்காரனை அடித்த வழக்குக் கொழும்புப் பொலிஸ் கோட்டிலே விசாரணைசெய்யப்பட்டது. நீதிபதி அவளுக்கு 75 ரூபா அபராதம் விதித்தனர்.

மத்தியமாகாணத்திற் பெருமழை:—மத்தியமாகாணத்திற் பெரு மழை பெய்தமையினால் புகைரதப் போக்குவரவு தடைப்பட்டது. பேராதனைக்கும் கம்பளைக்கும் இடையிலுள்ள இருப்புப்பாதை வெள்ளத்துள் மறைந்துகிடக்கின்றது. தொப்பிதோட்டத்திலும், அலக்கலாவுக்கும் பலனுவுக்கும் இடையிலும் அனேக நிலச்சரிவுகள் ஏற்பட்டன. மகாவலிகங்கை அணைகடந்து பெருகியது.

இரத்தினபுரியில் வெள்ளப் பிரவாகம்:—இரத்தினபுரியில் பெருமழை பெய்தமையினால் அனேக தெருக்களில் 10 அடி தொடக்கம் 15 அடிக் தண்ணீர் நிற்கின்றது. நூற்றுக்கணக்கானோர் வீடிழந்தனர்; சில இடங்களில் வீட்டுக் கூரைகள்மாத்திரம் காணப்படுகின்றன. தபாற்கந்தோர், கச்சேரி, கோட்டுவீடு முதலியஇடங்களிலும் வெள்ளப்பிரவாகம் அதிகமாயது. அரசாட்சி வேலைத்தலங்கள் பூட்டப்பட்டன. சனங்கள் உயர்ந்த வீட்டுக் கூரைகளிலும் மரக் கொம்பர்களிலும் தந்திமரங்களிலும் தங்கியும் தொங்கியும் நிற்கின்றனர். அனேக ஆடுமாடுகள் அள்ளுண்டு மாண்டன.

### உபசரணைக் கூட்டம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு கோப்பாய்ச் சரஸ்வதி வித்தியாசாலையில் மத்திய பிரிவுப்பிரதிநிதியாகிய கௌரவ ஸ்ரீ. சு. இராசரத்தினம் அவர்களை உபசரித்தற்பொருட்டு ஓர் கூட்டம் நடைபெற்றது. உபசரணைக்கூட்டம் நடத்தும்வண்ணம் அன்று பிற்பகலே ஒழுங்கு செய்யப்பட்டதாயினும் கோப்பாயிலும் அதன் அயற்கிராமங்களிலுமுள்ள அநேக பிரபுக்கள் சமுகமாயிருந்தனர். அத்தருணம் சமாதான நீதிபதி ஸ்ரீ. அ. நாகைநாதமுதலியாரவர்கள் அக்கிராசனம் வகித்தனர். ஸ்ரீ. சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயரவர்களும் வடகோவை வி. வேலுப்பிள்ளை ஆசிரியரவர்களும், நீர்வேலி ஸ்ரீ. ஆ. அருணாசலமவர்களும், நீர்வேலி ஸ்ரீ. வ. சி. கந்தையாபிள்ளை (மானிப்பாய் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதர்) அவர்களும் விசேஷ பிரசாரணம் செய்தனர். அதன்பின் அக்கிராசனரவர்கள் கௌரவ ஸ்ரீ. இராசரத்தினமவர்களுடைய திறமைமையை வியந்து முடிபுரை கூறினர். ஸ்ரீ. இராசரத்தினமவர்கள் எழுந்து, தம்மை மத்தியபிரிவுப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்ததோடமையாது இவ்விதமாக உபசரித்தமையினாலும் மத்திய பிரிவிலுள்ள ஒவ்வொருவருக்கும் தாம் என்றும் பெரிதும் கடப்பாடுடையரென்றும், அவற்றிற்காக மேற்படி பிரிவிலுள்ள ஒவ்வொருவரையும் நன்றியறிதலுடன் துதிக்கின்றேனென்றும் கூறி முடித்தனர். ஸ்ரீ. சுவாமிநாதரவர்களால் அக்கிராசனரவர்களுக்கு ஸ்துதி கூறப்பட்டபின் கூட்டம் சமாப்தியாயிற்று.

## இந்திய சமாசாரம்.

### மகாத்மாவின் உண்ணாவிரதம்.

இந்துக்களுக்கும் மகமதியருக்குமிடையே ஐக்கியத்தைவேண்டி மகாத்மா உண்ணாவிரதத்தை 21 நாட்களுக்கு ஆரம்பித்து இன்றுவரையிற் பத்துப் பன்னிரண்டு நாட்கள் சென்றுவிட்டன. மகாத்மாவின் விரதாரம்பத்தைக் கண்ட பல இந்தியமகமதிய சனத்தலைவர்கள் பதைபதைத்து இரு சாதியாரும் ஐக்கியப்படுதற்கான முயற்சி செய்கிறார்கள். இவருட்சிலர் தாங்களும் உண்ணாவிரதத்தை அனுட்டிக்கத் தொடங்கியிருக்கின்றனர். இருபகுதியாருக்குமிடையில் ஐக்கியம் ஆரம்பித்துவிட்டது. ஆனால் மகாத்மா இன்னமும் தமது விரதத்தை விடாமையினால் அவர் தேகநிலை அபாயத்திலிருக்கின்றதென்று எல்லாரும்சஞ்சலப்படுகின்றனர். இந்திய மகமதிய சனத்தலைவர்கள் மாத்திரம் சொல்லாமல் ஐரோப்பியர் சிலரும் மகாத்மைவிற்கு விரதத்தை நிறுத்தும்படி விநயத்தோடு தெரிவித்திருக்கின்றனர். வைத்தியர்கள் இவ்விரதம் அபாயத்திற்குக் காரணமெனக் கண்டு விடும்படிசொன்னால் தாம விடுவதற்குச் சித்தமாயிருப்பதாக வாக்களித்திருக்கின்றார். முடிவு எவ்வாறாகுமோ அறியேம்.

## கடிதம்.

### யாழ்ப்பாணச் சாது சங்க ஆச்சிரம விஞ்ஞாபனம்.

மகாகனம் பொருந்திய புண்ணிய சீலர்களே!

'யாழ்ப்பாணச்சாதுசங்க விஞ்ஞாபனம்' என்னும் புத்தகத்தை வாசித்த அன்பர்கள் யாவரும், யாழ்ப்பாணத்துக்கு ஒரு சாதுசங்கம் அத்தியாவசியகம் வேண்டப்படும் என்பதை ஒத்துக்கொள்வர். அது வேண்டப் படவே, அவர்கள் வசித்தற்கு ஓர் ஆச்சிரமமும், அவர்களைத்தாபரித்தற்கு ஒரு நிதியும் இன்றியமையாதன என்பதையும் ஒத்துக்கொள்ளுவர்.

உண்மைத்துறவிகளை நாம் ஆதரித்தல் வேண்டும். அவர்களால் நமக்கு வரும் பிரயோசனம் மிகப்பெரிது. அவர்களே குருலிங்கசங்கம மென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவற்றுள் ஒன்றாகிய சங்கமமாவர். உண்மைத்துறவிகள், ஞானிகள், யோகிகள் முதலிய சிவனடியார்களே சாதுக்களெனப்படுவர். அவருடைய கூட்டமே சாதுசங்கமெனப்படும்.

குடிசனங்கள் மந்திரி மூலமாய் அரசனைத் தரிசித்து, வேண்டியவற்றைப் பெறுவது போல, நாங்களும் இச்சாதுக்கள் மூலமாகவே கடவுளை வழிபட்டு வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்வோம்.

நாம் குடியிருத்தற்கு வீட்டைக் கட்டுவது போலவும், சிறுவர்கள் கல்விகற்றற்கு வித்தியாசாலை அமைத்தல் போலவும், கடவுளைவழிபடுதற்கு ஆலயத்தை யமைத்தல்போலவும் இச் சாதுசங்கம் இருத்தற்கு ஓர் ஆச்சிரமத்தை அமைத்தல்வேண்டும்.

இதற்காக, நாமெல்லாம் முதலில் ஒருசபை கூடி இதனை அமைத்தற்குரிய வழிகளை ஆலோசித்தல்வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள மற்றெல்லாத் தலங்களினுஞ் சிறப்புற்றதும், தினந்தோறும் அடியார் கூட்டம் வந்து வழிபடப் படுவதும், சுக்கிரவாரம் முதலிய விசேடதினங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள மற்றைய ஊர்களினின்றும் அன்பர்கள் வந்து வழிபட்டு, இட்டசித்திகளைப் பெறுவதும், தலவிசேடம், தீர்த்தவிசேடம், மூர்த்தி விசேடமுடையதும், அடியார் கூட்டம் வசிக்கப் பெறுவது மாகிய நல்லூர்க்கந்தசுவாமி கோயிலின் சமீபமே இந்த ஆச்சிரமமமைத்தற்குத்தகுந்த இடமாகும்.

### சாதுசங்க நிதி.

சாதுசங்கத்துக்கு ஆதாரமாகச் சாதுசங்க ஆச்சிரமமும் அவ்வாச்சிரமத்திற்கு ஆதாரமாகச்சாது சங்கநிதியும் இருக்கவேண்டும். இதற்குச் சனங்களின் ஊக்கமும் ஒற்றுமையும் அவசியம் வேண்டியன. ஒவ்வொருவரும் திரிகரணங்களும் ஒத்துப் பத்தி சிரத்தையோடுவேலை செய்தல்வேண்டும். நாம் தருமத்துக்கென்று கொடுக்குங் கொடைகள் ஒவ்வொன்றும், நமக்கும் பிறர்க்கும் பிரயோசன முடையதாயிருத்தல் வேண்டும்.

நாம், தற்காலத்திலே திருவிழாக்களுக்கும், விவாகச் சடங்குகளுக்கும், அந்தியேட்டி முதலிய வற்றிற்கும் பெருந்தொகைப்பொருளை வீணவழிகளிற்செலவுசெய்கின்றேம். இவற்றால் வரும் பயனிலும் எத்துணையோமடங்கு விசேஷமானது, சாதுசங்க தருமத்தால் வரும் பயனாகும்.

நாமும் பிறரும் இம்மையிலும் மறுமையிலுஞ் சுகமடைய வேண்டின், நம்நாடு, நன்றாக வேண்டின், எங்கள் வேதாகமங்கள் மேன்மேலும் பிரகாசித்து அவற்றிற் சொல்லப்பட்ட தர்மங்கள் விருத்தியடையவேண்டின் எங்கள் தமிழ்க்கல்வி சிறப்படையவேண்டின், எங்கள் சாதியார் ஏற்றம்பெறவேண்டின், எக்காலத்தும் ஒப்புயர் வில்லாத அருள் நெறியாகிய வைதிக சைவமார்க்கம் விருத்தியாக வேண்டின், இப்பொழுது உலக மெங்கும் பரம்பி வரும் அதர்மங்கள் ஒழிந்து அறம், பொருள்,

இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நிலை பெற்று மனிதவர்க்கம் சுகமடைய வேண்டின், பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் வருணாச்சிரமங்களாலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் முத்திமார்க்கங்களாலும், இம்மையிலேயே சடவுளையும் ஆன்மாவையும் அறிந்து முத்தியின்பம் பெறவேண்டின், நாமெல்லோரும் இச்சாது சங்கமிதிக்கு ஒத்துழைத்தல்வேண்டும்.

பிறச்சமயத்தவர் ஒருசபை கூட்டி அதன் வழியாய் ஊர்தோறும் பிரசங்கங்கள் வித்தியாசாலைகள் ஆலயங்கள் முதலியவற்றை அமைத்து, தங்கள் சமயத்தைப் பரப்புவது போல, நாமும் இச்சாதுசங்கத்தை உண்டாக்கி இதன்வழியாய்ப் பிரசங்கங்கள், வித்தியாசாலைகள், தேவாலயங்கள் முதலியவற்றை அமைத்து நமது சைவசமயத்தை விருத்திப்படுத்த வேண்டும்.

சாதுசங்கத்திலே பயிற்றப்பட்ட சாதுக்கள், யாழ்ப்பாணத்திலே பலபாகங்களினும் ஆச்சிரமத்தை ஏற்படுத்தி, ஒவ்வோர் பிரிவுக்கு ஒவ்வோர் மணியகாரர் இருப்பதுபோல ஒவ்வோர் ஆச்சிரமத்துக்கும் ஒவ்வோர் சாதுவை ஏற்படுத்தித் தர்மபரிபாலனம், சமயபரிபாலனஞ் செய்துவரல்வேண்டும்.

யாழ்ப்பாணத்திலே, பொதுவிஷயமாக எவை எவை செய்யப்படவேண்டுமோ, அவையெல்லாம் இச்சாதுசங்க மூலமாகச் செய்யப்படல் வேண்டும். வேறெவராவது தனியே ஏதும் தருமஞ் செய்யவாவது, சிவாலயத்திருப்பணி கோர்கடன் முதலியவற்றைச் செய்யவாவது சனங்களிடம் பணஞ்சேர்க்க விரும்பின், இச்சாதுசங்கத்தின் நற்சாட்சிப்பத்திரம் பெற்றுத் தொடங்கல்வேண்டும்.

நாங்கள், நல்லூர்க்கந்தசுவாமி கோயிலின் சமீபமான இடத்திலேயே சாதுசங்க ஆச்சிரமமொன்றை ஏற்படுத்தி, அதிலே சமயாபிமானம், தேசாபிமானம், சாதியபிமானம், வேதாகம உணர்ச்சி, சிவகாருண்ணியம் முதலிய விசேடகுணங்கள் அமையப்பெற்ற சாதுக்களை எங்களுக்கு வழிகாட்டிகளாக்கி, அவர்களுக்கு வேண்டும் உணவு முதலியவற்றைக் கொடுத்து, அவர்களையே எங்கள் குருமாராகவும், பிரசங்கிகளாகவும், எங்களை நல்வழிப்படுத்தும் உத்தமராகவும் வைத்துக்கொள்ளல்வேண்டும்.

எத்தனையோ சபைகள் யாழ்ப்பாணத்திலே தோன்றி அழிந்து போனமையைப் பிரத்தியட்சமாய் அறிந்திருக்கிறோம். அப்படி அழியாவண்ணம் முதலிற் தக்க நிதியைச் சேர்த்து, நற்குண நல்லொழுக்கமுடைய பெரியோர்களைச் சபைத்தலைவர்களாக்கி, நல்ல கட்டுப்பாட்டுடன் இச்சங்கத்தை நடத்தல் வேண்டும்.

இச்சங்கத்தை நடத்துவோர் தம்பயன்கருதாதவராயிருத்தல் வேண்டும். தம்பயன் கருதுபவர் ஒவ்வோர் நோக்கமுடையவராயே இருப்பர். தங்கள் நோக்கத்தை முடிக்கும் நோக்கமாகவே முயற்சி செய்வர். நோக்கம் முடிந்த பின் வேலையையும் விட்டுவிடுவர். அல்லதும் தங்கள் நோக்கத்துக்கு மற்றவர் மாறுயின் வேலை செய்பவரைக் கட்சி பிரித்துக் கலகம் விளைவித்துத்தருமத்தைக் கெடுத்து விடுவார்கள்.

இனிப் பொருளாசையுடையோர், பொதுத் தருமங்களைச் செய்விக்கும் பொழுது, அவை மூலமாகத்தாம் பொருள் சம்பாதிக்கமுயல்வர் புகழைவிரும்பினோர், இவற்றால் தமக்குப் புகழ் உண்டாகவேண்டுமென்று தொழில் செய்வர். சிலர் இவர்களை இகழ நேரின் தாம் செய்து வரும தர்மவிஷயங்களை இடையில் விட்டு விடுவர். சமயாபிமானமும் தேசாபிமானமும் பூண்ட இல்லாச்சிரமிகள் இவற்றை நடத்தத் தொடங்கின், அவர்களுக்கு நேரங்கிடைப்பது அரிது. ஒவ்வொருநிமிஷமும் அவர்களுக்கு வேலை வந்து கொண்டேயிருக்கும். குடும்ப காரியங்களில் ஓயாதவேலையும் தீராத கவலையுமாயே இருக்கும். மனைவிமக்களுக்கு நோய் முதலியன வரின், எல்லாங்கைவிடவரும். ஆதலால், இத்தருமத்தை நடத்துவோர் பற்றற்றவர்களாயே யிருத்தல் வேண்டும்,

ஆதலால், இத்தருமங்கள் தளர்வின்றிநடைபெறுதற்குச் சைவசமயிகளாகிய நாமெல்லாம் ஒவ்வொருவரும் தொடக்கத்தில் எங்கள் மாதவரும்படியில் பத்திலொன்றும், பின் மாதந்தோறும் நூற்றிலொன்றுக்குக் குறையாமலுங் கொடுத்துவரல் வேண்டும். இத்திருத்தொண்டில் ஈடுபடும் வண்ணமும், சமயாபிமானிகள் தமது நோக்கங்களை இப்பத்திரிகைவாயிலாக வெளியிடுமாறும் மிகவும் விநயத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

தம்பையா,
சங்கானை

---

## வட இலங்கைச் சுதேச பாஷாசிரியர் சபை.

இச்சபையின் வருஷாந்தக்கூட்டம் முன்னறிவித்தபடி இந்தசீ 2ஆ சனிவாரத்தன்று பிற்பகல் மூன்றுமணி யளவில் தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் விடுதி ஆண்பாடசாலை மண்டபத்தில் கனம். S. பிலிப்ஸ் M. A. J. P. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நட தேறியது. அவ்வமயம் அக் காரியதரிசியாற் சென்ற கூட்டவரலாறு வாசித்து நிறைவேற்றப் பட்டது. பின் ஸ்ரீ. எஸ். எம். வைத்தியலிங்கம் அவர்களால் "தமிழ்க் கல்வியின் தற்கால நிலைமை" என்னும் விஷயமாக ஓர் வியாசம் வாசிக்கப் பட்டது. அதன்பேரில்சிலர்குறிப்புரைகூறினர். பின் அக்கிரசனர் ஆசிரியரின் "உபகாரவேதனம்" என்னும் விஷயமாகப் பேசியபோது ஆசிரியரின் தாரதாத்திற் கேற்கச் சரியான சம்பள ஒழுங்குத் திட்டம் செய்யப்படல் வேண்டுமென்றும், அதன்பின்பே வருடாந்தம் கொடுக்கவேண்டிய உபகார வேதனத் தொகையை அறியலாமென்றும் ஆசிரியர் உபகாரவேதனத்திற்காய் தமது சம்பளத்திலிருந்து ஓர் சிறுத்தொகை அரசாட்சி உத்தியோகஸ்தரைப்போலக் கொடுக்க நேருமென்றும் உபகார வேதன விஷயமாக ஆலோசனை அங்கத்தவர்கள் வினவியபோது அரசாட்சித் தனதிகாரி கூறியதாகச் சொன்னார். தவிரச் சம்பள ஒழுங்குத்திட்டம் செய்வதற்குரிய ஒழுங்குகள் வலவேசெய்யப்பட்டிருக்கின்றன வென்றும் உபகார வேதனத்தைப்பற்றிய விஷயம் வருகிற கார்த்திகை மாசம் முடியுமுன் நிச்சயமாய்முடிவுக்கு வரும் என்றும் வற்புறுத்திக் கூறினர். இவற்றுடன் ஒவ்வோர் சுவபாஷா பாடசாலையிலுமுள்ள ஆசிரியற்குரிய வேதனத் தொகை முழுவதையும் அரசாட்சியாரே கொடுப்பது மன்றிக் குறித்த பாடசாலையின் ஆசிரியர்க்குக் கொடுக்கப்படும் வேதனத் தொகை முழுவதின் ஓர்பகுதி அப் பாடசாலையின் மற்றுஞ் செலவுகளுக்காக உதவி நன்கொடையாய்க் கொடுக்கப் படுமென்றும் இடாப்பிலுள்ள பிள்ளைகளில் முதல் முப்பது பேருக்கு ஒருவரும் அடுத்துவரும்ஒவ்வொருஇருபது பேருக்கு ஒவ்வொருவருமாய் பாடசாலைக்கு இனிமேல் ஆசிரியரைஏற்படுத்த ஒழுங்கு செய்கின்றனரென்றும் கூறிமுடித்தனர். பின் கனம் P. இக்னேசியஸ் அவர்களும் சில ஆசிரியரும் குறிப்புரைகள் கூறினர். பின் புதிய வருடத்துக்குரிய உத்தியோகஸ்தர்களும் காரியஸ்தரும் தெரிவு செய்யப்பட்டனர். கடைசியாய்ச் சில நிர்ணயங்கள் நிர்ணயித்து அவற்றைஎங்கள் பிரதிநிதிகள்மூலம் அரசாட்சியாரின் கல்விச் சங்கத்திற்கு வெளிவிடும்படி தீர்மானிக்கநேரமின்மையால் அவற்றைப் பின்காரியதஸ்தர்கூடி யோசித்துச் செய்தல்வேண்டுமெனச்சபையார் தீர்த்தனர். கூட்டம் பின்னேரம் 6மணிவரையில்முடிவுற்றது.

இங்ஙனம்
வே. இ. இரத்தினம்
காரியதரிசி

23—9—24
ஆண்விடுதிப்பாடசாலை
தெல்லிப்பழை.

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ரு தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

---

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ் (முதல்தர) தேவஔஷதங்களைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

## மகா வீரிய தங்க பஸ்பம்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை:

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

## குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி

நாட்பட்ட பிரமேகம். தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும் நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.
வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**சி. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.

(Q. (B) 46)

---

முந்துங்கள்! முந்துங்கள்!!

குறைந்த விலை விற்பனை.

## கோல்டு மெடல் பட்டு புடவை.

இந்த புடவையின் உடல் சாதா, கரைகளுக்கு உயர்ந்த ஜரிகையினல் டேப்பு கரையும், முகதலைக்கு ஜரிகை பல்லாவுமுள்ளது. நாகரீகத்தை விரும்பும் தற்காலத்திற்கு ஏற்றபடி தயாரிக்கப்பட்டது. கலர்கள்:—வெள்ளை, ரோஸ், வெங்காயவர்ணம், கத்தரிம்பூவர்ணம், மேகவர்ணம் முதலியவை.

12 முழம்×44 இஞ்சு புடவை 1-க்கு ரூபா 30, 35
16 மு. ×44 ,, ,, ,, ரூபா 38, 50
18 மு. ×44 ,, ,, ,, ரூபா 50, 75

**கே. எஸ். முத்தையா & கம்பனி,**
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

---

### தத்துவ அழித்தல்.

வண்ணார்பண்ணை மேற்கு மனப்புலிசிங்கம் சின்னத்துரையாகிய நான் 1917ஆ ஐப்பசிமீ 20உ நொத்தாரிஸ் ச. சபாபதிப்பிள்ளை முகதாவில் எனது சகோதரன் பெரியவிளான் மனப்புலிசிங்கம் சின்னப்பாவுக்கு எழுதிக் கொடுத்த சுற்றோணித்தத்துவத்தை யித்தால அழித்துப் பெலனற்றதாக்குகிறேன். இனிமேல் குறித்த சின்னப்பா செய்யும் எச்செய்கைக்காயினும் நான் உத்தரவாதியல்ல.

ம. சின்னத்துரை.

வண்மேற்கு,
1—10—24
(Mis. 538)

### பிரசாரகர் தேவை.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு ஒரு சைவப் பிரசாரகர் வேண்டும். விண்ணப்பப் பத்திரம் வேண்டிய விபரங்களுடன் வருகிற அக்டோபர்மீ கடு-ந் திகதியிலன்று அல்லது அதற்கு முன் ஷெ சபைக் காரியதரிசிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

V. K. ஞானசுந்தரம்,
ஷெ சபைக் காரியதரிசி

வண்ணார்பண்ணை,
19—9—24.

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.